# திருவருகைக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

‘எப்போதும் மகிழ்ச்சியாய் இருங்கள்’ என்று நமக்கு மகிழ்வோடு அழைப்பு விடுக்கின்றது இன்றைய திருவருகைக்காலம் 3ஆம் ஞாயிறு. இன்று ஏற்றும் மெழுகுதிரி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது. இறைமகனின் வருகை எளியோரிடத்திலும், வறியோரிடத்திலும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது என்பதை இத்திரி நினைவூட்டுகின்றது.

மனிதன் இன்பமாய் வாழவே ஏதேன் என்னும் இன்பத்தை படைத்தார் இறைவன். மேலும் இன்புற்று வாழவே இணையைத் தந்தார். மகிழ்வின் எல்லையாக மழலையையும் தந்து ஆசீர்வதித்தார். இறைவன் நம் வாழ்வில் அனுமதித்தது எல்லாம் மகிழ்ச்சியின் கூறுகளே. நாம் தான் மறைவானதைத் தேடும் பொருட்டு மனதினுள் மகிழ்ச்சியைத் தொலைக்கிறோம்.

மகிழ்வைப் பகிர்ந்து கொள்ளும்போது இரட்டிப்பாகிறது.

அதையேப் பதுக்கும்போது பாதியாக குறைந்து விடுகிறது.

மகிழ்வோம் மகிழ்வை பிறரோடு பகிர்வோம்.

இன்றைய முதல் வாசகத்தில் மெசியாவின் வருகையின்போது மனிதர்களிடத்தில் ஏற்படும் மகிழ்ச்சியையும் நிறைவான வாழ்வையும் எசாயா இறைவாக்கினர் எடுத்துரைக்கின்றார். “அவர்கள் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்திருக்கும். அவர்கள் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைவார்கள். துன்பம் பறந்தோடும்.” இவை வார்த்தைகள் அல்ல, இவை இறைவாக்குகள். எனவே இத்தகைய ஆசீர் நம்மிலும் பொழியப்படும் என்பதை விசுவாசிப்போம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், “வரவிருப்பவர் நீர் தாமா?” என்ற யோவானின் எதிர்பார்ப்பையும் “நான் என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன்” என மறைநூலில் கூறப்படுவது யோவானைப் பற்றியே என இயேசு புகழ்ந்துரைப்பதையும் புனித மத்தேயு வெளிப்படுத்துகின்றார். ‘விண்ணரசில் சிறியவர் மனிதர்களில் யோவானைவிடப் பெரியவர்’ என்கிறார் இயேசு. மெசியாவை மனதினுள் ஏற்றுக்கொள்ளும்போது மகிழ்ச்சி பிறக்கிறது, வாழ்வு சிறக்கிறது. இச்சிந்தனைகளை மனதில் தாங்கி இப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் தெய்வமே இறைவா!

உமது வழியை ஆயத்தம் செய்ய நீர் தேர்ந்தெடுத்த எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தாம் அழைக்கப்பட்ட இறை நோக்கம் உணர்ந்து, இறை, உண்மைப் பாதையில் நடக்கவும், இறைமக்கள் இறைவனின் பாதையில் பயணிக்க தேவையான ஆன்ம வழிகாட்டுதலைத் தந்து, மகிழ்வோடு பிறருக்கு பயனுள்ள வாழ்வு வாழ வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வழிகாட்டும் துணையாளரே எம் இறைவா!

எங்கள் மறைமாவட்ட ஆயரை ஆசீர்வதியும். தூய ஆவியின் அருள் வரங்களை அவருக்கு அளித்து, நல்ல ஆயனாய், துறவறத்தாருக்கும் பொதுநிலையினருக்கும் வழிகாட்டியாய் வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள் என்றவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள் 'தாங்கள் பணி புரியவே வந்தோம்' என்பதை மனதில் கொள்ளவும், நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் பொருளாதார பின்னடைவை சரியாக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்ளவும், சீராக்குதல் என்னும் பெயரில் மக்கள் தலையில் வரிகளை சுமத்தாமல், அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் போன்ற சவால்களை அறிவோடு சந்தித்து, நாட்டை வளர்ச்சிப் பாதையில் நடத்த தேவையான நல்லறிவு தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. மகிழ்ந்திருங்கள் என்றவரே எம் இறைவா!

எம்முள் இருக்கும் மகிழ்ச்சியை மீட்டெடுக்கவும், இன்றைய அவசர உலகில் பொறுமையோடு எங்கள் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு, மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ளவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. விண்ணக ஆசீரைப் பொழிபவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய மழையைத் தந்து நீர்நிலைகளை நிரம்ப செய்தவரே உமக்கு நன்றி இறைவா. மாசடையாமல் நீர்நிலைகள் பேணப்படவும், விவசாயம் செழிக்கவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி நிறைவாக இருக்கவும், மாணவர்கள் சிறந்த ஞானம் பெறவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமது அருளால் பெற்று மகிழவும் வரம் அருள வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com